DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 87/2026
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | கலைச்செல்வி |
| Father / Husband Name | முருகன் |
| Village | கிணபதி பட்டு |
| Taluk | திண்டிவனம் |
| Age | 39 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26.**05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பூதூரில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன முருகன் எனது கணவர் ஆவார். கடந்த 10.09.2025 ஆம் தேதி மாலை 3.30 மணிக்கு என் கணவர் எங்களுக்கு சொந்தமான 3792 என்ற பதிவெண் கொண்ட ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் பூதூருக்கு சென்று விட்டு திரும்ப வரும்போது அச்சிறுபாக்கம் ஜங்ஷன் அருகே வரும்போது லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் என் கணவரை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது தலையில் அடிப்பட்டு இறந்திருந்தார். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)**

ம. கலைச்செல்வி

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
26/5/26
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 87/2026
Miscellaneous :
Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | குமரவேல் |
| Father / Husband Name | மணி |
| Village | கணபதிபட்டு |
| Taluk | திண்டிவனம் |
| Age | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26**.05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கணபதிபட்டில் வசித்து 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன முருகன் எனது அண்ணன் முறை ஆவார். அவர் கடந்த 10.09.2025 ஆம் தேதி காலை பூதூருக்கு சென்றுவிட்டு TN 32 BB 3792 என்ற பதிவெண் கொண்ட ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் திரும்ப வரும்போது போலம்மாள்குளம் அருகே வரும்போது டிப்பர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்று பார்த்தபோது மேற்படி விபத்து ஏற்படுத்திய லாரி அங்கு இருந்தது. அதன் பதிவெண் 9684 ஆகும். நான் என் அண்ணனை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது தலையில் அடிப்பட்டு இறந்திருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
26/5/26
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 87/2026
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அருமைராஜ் |
| Father / Husband Name | பெருமாள் |
| Village | கணபதிபட்டு |
| Taluk | திண்டிவனம் |
| Age | 34 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26.**05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கணபதிபட்டில் வசித்து ஹார்டுவேர்ஸ் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன முருகன் எனக்கு மாமா முறை ஆவார். அவர் கடந்த 10.09.2025 ஆம் தேதி காலையில் புறப்பட்டு பூதூருக்கு ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டு திரும்ப வரும்போது தொழுப்பேடு டோல்கேட் அருகே வரும்போது மணல் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் என் மாமாவை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது தலையில் அடிப்பட்டு இறந்திருந்தார். பின்னர் அவர் பிரேதத்தின் மீது போலிசார் நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)**

P. Arumairaj

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
26/5/26
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 87/2026
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | லட்சுமணன் |
| Father / Husband Name | கோவிந்தசாமி |
| Village | [illegible] |
| Taluk | [illegible] |
| Age | 45 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26.**05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சாலவேட்டில் வசித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து தாம்பரம் பணிமனையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 10.09.2025 ஆம் தேதி என் மனைவி விஜயபாரதி என்பவரின் பெயரில் உள்ள TN 21 AE 9684 என்ற டிப்பர் லாரியில் ஆஜர் எதிரியை டிரைவராக நியமித்து அவர் புலியணை கிராமத்தில் இருந்து வந்தவாசிக்கு கிராவல் மண் அல்லிக்கொண்டு தொழுப்பேடு மேம்பாலம் கீழே வளைவில் வரும் போது இருசக்கர வாகனம் மேற்படி டிப்பர் லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக ஆஜர் எதிரி எனக்கு தகவல் சொன்னார். பின்னர் விபத்தில் ஒருவர் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார். பின்னர் நான் காவல் நிலையத்திற்கு சென்று மேற்படி வாகனத்தின் ஆவணத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். மேற்படி விபத்து சமயத்தில் லாரியை ஓட்டியவர் ஆஜர் எதிரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)**

G. Lakshmanan.

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the [illegible] and admitted by the witness to be correct.

26/5/26
Judicial Magistrate No.II
Madurantakam